# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/19 - 2015 ජූනි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.06.11

*1918/19 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 56

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, வர்த்தகர்கள், உணவு தருவிப்பவர்கள் தயாரிக்கப்பட்ட உணவு வழங்குனர்கள் மற்றும்/அல்லது எவரேனும் தனிநபர்/தனிநபர்கள் ஒப்பந்த அடிப்படையில் உணவு தருவிப்பவர்கள் மற்றும்/அல்லது வெளிவாரி உணவு தருவித்தல் அல்லது உணவு விநியோகத்துடன் தொடர்புபட்ட அல்லது தொடர்புடைய தொழில்/தொழிற்பாடுகளில் ஈடுபடுவதாயின் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் (SLSI) வழங்கப்பட்ட சிறந்த உற்பத்தியாளர் செயற்பாட்டுமுறை (ஜி. எம். பி.) சான்றிதலை பெற்றிருத்தல் வேண்டும் என கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இப்பணிப்புரை 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

**வரைவிலக்கணம்** :

**பெரியளவில் உணவு தருவிப்பு** – அதிகளவு எண்ணிக்கையான மக்களுக்கு உணவு தயாரித்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும்/அல்லது தருவித்தலும் விநியோகித்தலும்.

**வெளிவாரியாக உணவு தருவிப்பு** – தேவைப்படும் இடங்களில் உணவு மற்றும் பானங்களை குறிப்பிட்ட நேரம், இடம், உணவுப் பட்டியல், விலை என்பவற்றிற்கு அமைவாக விநியோகித்தல்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2015, யூன் 01.

06 – 760




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.